பக்கங்கள்: 10

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 06 சனிக்கிழமை 21.12.2024 கதிர் 044

## இனி இது ரகசியம் அல்ல!

ரெலோவுக்குள் ஏற்பட்டுள்ள தலைமைக்கு எதிரான பிரச்சினை மெல்ல ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குள்ளும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. தேர்தலில் அடைந்த படுதோல்விக்குப் பின்னர் இந்தக் கூட்டணி ஈடாட்டம் கண்டுள்ளது. ☞ 2

# சித்திரை புத்தாண்டுக்கு முன் உள்ளூராட்சி சபைத் தேர்தல்

## ஜனாதிபதி அநுரகுமார அறிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் வருடம் சித்திரை தமிழ் சிங்கள புத்தாண்டிற்கு முன்னதாக நடத்தப்படுமென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இந்தத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை மீள அழைப்பதே பொருத்தமானதாக இருக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களிடமிருந்து ஆசீர்வாதம்பெற்றுக்கொண்டதன் பின்னர் கண்டியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.



முதலில் மல்வத்து விகாரைக்கு சென்ற ஜனாதிபதி மல்வத்து மகாநாயக்க தேரர் திப்படுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை ☞ 2

## மியான்மர் அகதிகள் படகு மாலுமிகளுக்கு மறியல்

முல்லைத்தீவில் 103 மியன்மார் ஏதிலிகளுடன் இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசித்த படகின் மாலுமிகள் 12 பேர் டிசெம்பர் 31 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்

மேலும் ஏதிலிகள் மிரிஹானை தடுப்பு முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

115 பேருடன் பயணித்த மியன்மார் அகதிகள் படகு முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்பகுதியை நேற்று வந்தடைந்தது.

கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்ட இந்த அகதிகள் நேற்றுக்காலை திருகோணமலை துறைமுகத்திற்கு அழைத்துவரப்பட்டு, நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

(முன்னர் வந்த செய்தி உள்பக்கத்தில்)

## இந்திய போர்க் கப்பல்கள் 4 இலங்கை வருகின்றன

இந்தியக் கடலோர பாதுகாப்பு படையின் 4 கப்பல்கள் கொழும்பு மற்றும் காலி துறைமுகங்களுக்கு வரவுள்ளன. வைபவ் மற்றும் அபிராஜ் திங்கட்கிழமை (23) கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளன.

இக்கப்பல்கள் டிசெம்பர் 23 முதல் 27 வரை அங்கு நங்கூரமிடப்பட்டிருக்கும் என்பதோடு, ஏனைய இரு கப்பல்களும் டிசெம்பர் 29 முதல் ஜனவரி 2ஆம் திகதி வரை காலி துறைமுகத்துக்கும் செல்லவுள்ளன.

இக்கப்பல்களின் கட்டளை அதிகாரிகள் இலங்கை கடலோரக் பாதுகாப்பு படையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளனர். மேலும் தீயணைப்பு, அனர்த்தங்கள், கடல் மாசடைவை எதிர்கொள்ளல் உள்ளிட்ட பல்வேறு தொழில்முறைத் தொடர்புகள் பற்றிய கூட்டுப் ☞ 2



## விவசாய உற்பத்திகளுக்கான 10% கழிவு நடைமுறையை ஜனவரி முதல் ஒழிக்குக

### அதிகாரிகளுக்கு ஆளுநர் உத்தரவு

விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு சந்தைகளில் பத்து சத வீதக் கழிவு அறவிடும் நடைமுறை அடுத்த ஆண்டு ஜனவரியிலிருந்து முழுமையாக ஒழிக்கப்படவேண்டும். அதற்குரிய நடவடிக்கை எடுங்கள் என்று வடக்கு மாகாண உள்ளூராட்சிஆணையாளருக்குபணிபுரைவிடுத்துள்ளார் ☞ 8

## இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்த அமெரிக்கா தயார்

### அந்நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்த அமெரிக்கா தயாராக இருப்பதாகத் தெரிவித்தார் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங். தற்போதைய ஆளும்தரப்பின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக்கு அமெரிக்கா முழுமையான ஒத்துழைப்பை நல்கும் எனவும் உறுதியளித்தார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, ☞ 2

## காலியில் தம்பதி மீது துப்பாக்கிச் சூடு கணவன் இறப்பு: மனைவி காயம்

காலிதடல்லமயானத்திற்குஅருகில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தம்பதியர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கணவன் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மனைவி காயமடைந்து கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று காலி பொலிஸார் தெரிவித்தனர்.

மலகொட பகுதியைச் சேர்ந்த 45 வயதான பரனசூரிய படபண்டிகே பாத்தும் என்ற சந்தாமினி லொக்கா என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

அவரும் அவரது மனைவியும் ஜிந்தோட்டையில் இருந்து காலி நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது, மயானத்திற்கு அருகில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ரி-56 துப்பாக்கியால் சுட்டுவிட்டு காலி நோக்கி தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள் கீழே விழுந்த பின்னர் அதிலிருந்தவர்கள் மீது மீண்டும் துப்பாக்குச்சூடு நடத்தப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## அரசியலாளர்களுக்கு மதுபான உரிமம் தரும் கலாசாரத்தை நிறுத்தவேண்டும்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

சுற்றுலாத் தொழிலை மேம்படுத்துவதாக கூறிக் கொண்டு அரசியல்வாதிகளுக்கு மதுபான உரிமப் பத்திரங்களை வழங்கிய காலமொன்று இருந்தது. இந்த கலாச்சாரம் நிறுத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இலங்கை மது ஒழிப்பு பேரவையின் புதிய அலுவலக திறப்பு விழாவில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த ☞ 8

## வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்களுக்கான தடை டிசெம்பர் 31 வரையும் தொடரும்

### அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

எமது நாட்டுக்குள் சர்வதேச நாடுகளின் ஆய்வுக் கப்பல்கள் பிரவேசிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நடைமுறையிலிருக்கும் எனத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், ஆய்வுக்கப்பல் வருகையின்போது பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு விசேட குழுவொன்றைத் நியமிக்கப்பட இருக்கின்றது என்றும் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அண்மைய இந்தியப் பயணத்தின் போது ஆராயப்பட்ட விடயங்கள் மற்றும் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் குறித்துத் தெளிவுபடுத்தும் நோக்கிலான ஊடகவியலாளர் சந்திப் பொன்று நேற்று கொழும்பிலுள்ள ☞ 2

## ‘கிளீன் சிறிலங்கா’ செயலணியில் தமிழ் பேசுவோருக்கு இடமில்லை

‘கிளீன் சிறிலங்கா’ வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகளின்றி ஜனாதிபதி செயலணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டு இவ்விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

16 உறுப்பினர்களைக் கொண்ட இந்தசெயலணியில் ஜனாதிபதி செயலாளர் என்.எஸ்.குமாநாயக்க, இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி, விமானப்படைத் தளபதி, பதில் பொலிஸ் மாஅதிபர், நகர ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

# சீனத் தலைவி போயோங் சபாநாயகருடன் சந்திப்பு

*சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் தேசியக்குழுவின் துணைத் தலைவி குயின் போயோங் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை கடந்த 18 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சந்தித்தார்.*

*குயின் போயோங் தலைமையிலான தூதுக்குழுவினருக்கு சபாநாயகர் மதிய உணவு விருந்துபசாரத்தை ஏற்பாடு செய்திருந்ததுடன், இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான நீண்டகால நட்புறவுக்கு பாராட்டு தெரிவிக்கும் வகையில் இது அமைந்திருந்தது.*

*குறிப்பாக நாடாளுமன்ற ஒத்துழைப்பு, நிலைபேறான அபிவிருத்தி, வர்த்தகம், விவசாயம், தொழில்கள் மற்றும் பலதரப்பு ஈடுபாடுகள் போன்ற துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை சபாநாயகர் வலியுறுத்தினார்.*

*இலங்கையில்உள்ளமாணவர்களுக்கு 2025 ஆம் ஆண்டிற்கான பாடசாலை சீருடைகளை வழங்குவதற்கு சீன அரசு ஆதரவளித்தமைக்கு தனது மனமார்ந்த நன்றிகளையும் ஜகத் விக்கிரமரத்ன இச்சந்திப்பின் போது தெரிவித்தார்.*

*இரு நாடுகளுக்கும் இடையிலான நீடித்த நட்புறவை கோடிட்டுக் காட்டும் வகையில், அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார சவால்களின் போது சீனாவின் வழங்கிய குறிப்பிடத்தக்க உதவிகளை அவர் மேலும் பாராட்டினார்.*

*ஜகத் விக்கிரமரத்ன நாடாளுமன்ற சபாநாயகராக நியமிக்கப்பட்டமை குறித்து குயின் போயோங் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.*

*இலங்கையின் ஆளும்தரப்பின் பொருளாதாரமற்றும்சமூகஅபிவிருத்தி நோக்கங்களை அடைவதில் சீனாவின் உறுதிப்பாட்டை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.*

*மேலும், பரஸ்பர அபிவிருத்தி மற்றும் செழிப்பை மேம்படுத்துவதற்கு முக்கிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் சீனாவின் தயார்நிலையையும் அவர் வலியுறுத்தினார்.*

*பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, பணியாட்தொகுதியின் பிரதானியும் பிரதி செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன, இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென்ஹொங் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் உடனிருந்தனர்.*

## இனி இது .....

இந்தக்கூட்டணியில்உள்ளஈபிஆர்எல்எவ், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றைத் தரமிறக்குவது தொடர்பிலும் தம்மை அதற்குள் முதன்மைப்படுத்துவது தொடர்பிலும் ரெலோ சில காய்களை நகர்த்திப் பார்த்தது. புளொட்டும் அதற்குப் பட்டும் படாமலும் தலையசைத்தது.

இருந்தாலும் ஆற்றில் ஒரு காலும் சேற்றில் ஒரு காலும் என்பதைப் போல, ஜனநாயகக் கூட்டணியைக் கழற்றிவிட்டுவிட்டு தமிழ் அரசுக் கட்சியின் முதுகில் சவாரி செய்யும் ஆசையுடன் ரெலோ நழுவத் தொடங்கியதும், வழக்கம்போலவே எதுகுறித்தும் திட்டவட்டமாக முடிவெடுக்காத புளொட் இது விடயத்தில் ரெலோவின் பக்கமிருந்து நழுவி தற்போது மற்றவர்களுடன் சேர்ந்துகொண்டது.

இந்தக் கூட்டணிக்குள் ரெலோவுக்கு மட்டும்தான் இப்போது ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி உள்ளது. அதனால் தனக்குத்தான் மக்கள் ஆதரவு இருக்கின்றது மற்றவர்களுக்கு இல்லை என்று காட்டி கூட்டணிக்குள் தன்னை முதன்மைப்படுத்த ரெலோ முயன்றாலும், அடுத்தடுத்த தேர்தல்களில் தமிழ் அரசுக் கட்சியுடன் சேராவிட்டால் தமக்கு வெற்றி கிடைக்காது, குறிப்பாக மாகாண சபைத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியுடன் சேராவிட்டால் தோற்றுவிடுவோம் என்ற அச்சம் காரணமாக எப்படியாவது தமிழ் அரசுக் கட்சியுடன் தேர்தல் கூட்டு வைப்பதில் ரெலோவின் பொருளாளர் சுரேன் குருசாமியும் யாழ்ப்பாண உறுப்பினர் குகதாஸும் முனைப்புக் காட்டுகின்றனர்.

இவர்கள் இருவரும்தான் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் மாவட்ட அமைப்பாளர்கள் குழுவிலும் உள்ளவர்கள். இந்தக் குழுவின் தலைமை அமைப்பாளர் ரெலோ விந்தன். அவரோடு இந்த இருவருக்கும் ஆகாது. விந்தனை கட்சியிலிருந்து இடைநிறுத்துவதில் பின்னணியில் இருந்த முக்கிய புள்ளிகள் இவர்கள்தான். எனவே பதிலடிக்கு விந்தனும் தயாராகிவிட்டார் என்று தெரிகிறது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் மாவட்ட அமைப்பாளர்கள் குழுவில் இருந்து இந்த இருவரையும் வெளியேற்றிவிட்டு, புதியவர்களை நியமிக்கும்படி ரெலோவைக் கோருவது என்கிற முடிவுக்கு மாவட்ட அமைப்பாளர்களாக உள்ள எஞ்சிய 12 பேரையும் இணங்க வைத்திருக்கிறார் விந்தனர்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஜனாதிபதித் தேர்தலில் கணிசமான வாக்குகளை யாழ்ப்பாணத்தில் பெற்றபோதும் பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்ததற்கு, ஜனாதிபதித் தேர்தலில் ரெலோ நடத்திய ஏமாற்று நாடகம் முக்கிய காரணம் என்று இந்தப் 12 பேரும் நம்புகின்றார்கள். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரிப்பதாக ரெலோ அறிவித்தாலும் ரணிலோடு இரகசிய 'டீல்' பேசி, அவருக்கு ஆதரவாக அரியநேத்திரனுக்காகப் பரப்புரை செய்யாமல் ஒதுங்கியிருந்து கூட்டணியின் காலைவாரியது என்றும், இப்படி ரெலோ செய்த துரோகம் மற்றும் இழிவான அரசியல் காரணமாகவே மக்கள் தமிழ் அரசுக் கட்சிக்கு மாற்றாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைத் தெரிவுசெய்யாமல் விட்டார்கள் என்றும் இந்தப் 12 பேரும் கருதுகின்றார்கள். ரெலோவின் இந்த முடிவுகளுக்கும் நகர்வுகளுக்கும் அந்தக் கட்சியின் பொருளாளர் சுரேன் குருசாமியே காரணம் என்றும், அவர் ரெலோவுக்குள் புகுந்து முக்கிய பொறுப்புக்களை ஏற்ற பின்னரே அந்தக் கட்சி இந்தளவு தூரத்திற்கு மோசமானது என்றும் கருதும் இவர்கள், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் மாவட்ட அமைப்பாளர்கள் குழுவில் இருந்து இவர்களை நீக்குவதில் குறியாக இருக்கின்றார்கள். அதன் மூலம் தமது கூட்டணியைச் சுத்தப்படுத்த முடியும் என்று கருதுகின்றார்கள்.

இந்த இருவருக்குப் பதிலாகவும் வேறு நபர்களை குழுவிற்குப் பரிந்துரைக்குமாறு ரெலோ தலைமைக்குக் கடிதம் எழுதுவது என்றும் அவர்கள் தீர்மானித்துள்ளனர். அவர்கள் கேட்பது நடக்கும் சாத்தியமில்லை என்கிறார்கள் ரெலோவின் கிளர்ச்சிக்குழுவினர். கட்சிக்குள் செல்வம் அல்ல இப்போது சுரேனே தலைவர் என்பதால் அவரை விலக்கச் சொல்லி அவரிடமே கேட்பதில் எந்த நியாயமுமில்லை என்கிறார்கள் அவர்கள். தலைவர் செல்வம் மற்றும் செயலாளர் ஜனா ஆகியோர் சுரேன் சொல்வதற்குத் தலையாட்டுபவர்களாக மாறி நீண்ட காலமாகிவிட்டதால், அவரைத் தாண்டிக் கட்சி முடிவெடுப்பதற்கு முடியாது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

போர் முடிந்த கையோடு முதன்முதலில் வடக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு மகிந்த ராஜபக்ச அறிவித்தபோது, வவுனியாவில் அந்தத் தேர்தலில் போட்டியிடத் தயாரான ரெலோ உறுப்பினர்களின் தலையில் துப்பாக்கியை அழுத்தி மிரட்டி தேர்தலில் போட்டியிடக்கூடாது என்று மிரட்டிய சிறி ரெலோ உறுப்பினரே இன்று ரெலோலை ஆட்டிப் படைக்கும் நபராக மாறிவிட்டிருக்கும் நிலையில் அந்தக் கட்சி இனி உய்வதற்கு வாய்ப்பே இல்லை என்றும் அவர்கள் கூறுகின்றார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சித்திரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்து அவரிடம் நலம் விசாரித்ததுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் ஜனாதிபதியின் அண்மைய இந்தியப் பயணம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. மகாநாயக்க தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர் செத் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினர்.

அதனையடுத்து அஸ்கிரிய விகாரைக்கு சென்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வண. வரகாகொட ஸ்ரீ ஞானரத்தன தேரரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரர் ஆணமடுவே தம்மதஸ்ஸி தேரர், பிரதி பதிவாளர் நாரம்பனாவே ஆனந்த தேரர், முதியங்கன இரஜமகா விகாரையின் விகாராதிபதி வண. முருத்தெனியே தம்மரத்தன தேரர் உள்ளிட்டோர் இதன்போது வருகை தந்திருந்ததுடன் அவர்கள் செத் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதியின் எதிர்கால பணிகளுக்கு ஆசி வழங்கினர்.

ஆசிகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஜனாதிபதி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடத்துவதற்கு வேட்புமனுக்கள் அழைக்கப்பட்டன. ஆனால் அன்று இருந்த கட்சிகள் இன்று இல்லை. சில கூட்டணிகள் உடைந்துள்ளன. எனவே அந்த வேட்புமனுக்களை இரத்து செய்துவிட்டு புதிய வேட்புமனுக்களை அழைக்க வேண்டும் என்று நினைக்கிறோம்.

கடந்த அமைச்சரவையில் தீர்மானம் ஒன்றை பெற்று, வேட்புமனுக்களை இரத்து செய்வது தொடர்பான சட்டமூலத்தை தயாரித்துள்ளோம். இது ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதன் பிறகு, மீண்டும் வேட்புமனுக்களை அழைத்து, உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு சித்திரை புத்தாண்டிற்கு முன்னர் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அதேபோல், மாகாண சபை தேர்தலும் அடுத்த வருடத்தில் நடத்தப்படும் என்றார்.

## வெளிநாட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தகவல் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது இலங்கைக்கு வருகைதரும் ஆய்வுக்கப்பல்கள் தொடர்பில் இந்தியாவினால் வெளிப்படுத்தப்பட்ட பிரத்யேக கரிசனைகள் என்னவென்று ஊடகவியலாளர் ஒருவரால் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் விஜித்த ஹேரத், இந்தியா அதன் ஆட்புல எல்லை சார்ந்தும், பிராந்தியப் பாதுகாப்பு சார்ந்தும் கரிசனைகளை வெளிப்படுத்தியதாகத் தெரிவித்தார்.

தாமும் அந்த நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதாகவும், ஆகையினாலேயே இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கோ அல்லது பிராந்தியப் பாதுகாப்புக்கோ அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகள் இலங்கையில் இடம்பெறுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை எனத் தாம் உத்தரவாதமளித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அதேபோன்று இலங்கைக்கான ஆய்வுக் கப்பல் வருகை தொடர்பில் ஆராய்ந்து, அதன்போது கையாளப்படவேண்டிய நடைமுறைகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிப்பதற்காகப் பெரும்பாலும் இவ்வருட இறுதிக்குள் விசேட குழுவொன்றை நியமிக்கவிருப்பதாகவும், அக்குழுவினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையின் பிரகாரம் அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

அதனையடுத்து ஆய்வுக்கப்பல்களின் வருகை தொடர்பில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் அடங்கிய வழிகாட்டலைத் தயாரிக்கவிருப்பதாகவும், அதுவரையில் நாட்டுக்குள் ஆய்வுக்கப்பல்கள் நுழைவதற்கு ஒருவருடகாலதற்காலிகத்தடைவிதிப்பதாகவும் கடந்த ஆளும்தரப்பு விடுத்திருந்த அறிவிப்பை மேற்கோள்காண்பித்த ஊடகவியலாளர், ஒருவருடம் நிறைவுறும் நிலையில், அந்த நடைமுறை வழிகாட்டலுக்கு என்ன நடந்தது? என அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

அந்நடைமுறைகள் தொடர்பில் சில றிக்கைகள், முன்மொழிவுகள் என்பன சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும், இருப்பினும் தற்போதைய சூழ்நிலைக்கு அமைவாக அந்த நடைமுறைகளை மாற்றியமைக்க வேண்டியிருப்பதாகவும் அமைச்சர் பதிலளித்தார்

அத்தோடு ஆய்வுக் கப்பல்கள் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை டிசெம்பர் 31வரை நடைமுறையில் இருக்கும் எனவும், அதன் பின்னர் அத்தடையை நீக்குவதா? இல்லையா? என்பது குறித்து புதிதாக நியமிக்கப்படும் குழுவின் அறிக்கைக்கு அமைவாகத் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

## இலங்கையுடனான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல உள்ளிட்ட அதிகாரிகளை நேற்று கொழும்பில் அமைந்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் சந்தித்து பேச்சு நடத்தினார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்தத் தயாராக இருக்கிறார் என்று தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர், இலங்கை அபிவிருத்தி அடைந்த நாடாகமாறவேண்டும்என்பதுஅமெரிக்காவின் எதிர்பார்ப்பாகும் எனவும் தெரிவித்தார்.

அதற்காக தற்போதைய ஆளும்தரப்பு முன்னெடுக்கும் எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அமெரிக்கா முழுமையான ஒத்துழைப்பை நல்கும் எனவும் உறுதியளித்தார்.

மேலும் அரசியல் தலையீடுகள் இன்றி நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக புதிய ஆளும்தரப்பு எடுத்துள்ள முயற்சிகளை பாராட்டுவதாகத் தெரிவித்த தூதுவர் ஜூலி சாங், போதைப்பொருள் மற்றும் உலக பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கத்தயார் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கையில் இடம்பெறும் சைபர் குற்றங்களை தடுப்பதற்கான தொழில்நுட்ப உதவிகளையும் வழங்க எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## கிளீன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், கலாநிதி அனுருத்த கமகே, கலாநிதி காமினி படுவிடகே ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஒழுக்கமானசமூகத்தின்ஊடாகசமூகத்தை மேம்பட்டநிலைக்குஉயர்த்தும்நோக்கத்துடன் 'களீன் சிறிலங்கா' வேலைத் திட்டத்தை திட்டமிடல், நிர்வகித்தல், நடைமுறைப்படுத்தல், முன்னேற்றத்தை மீளாய்வு செய்து நிறைவு செய்ய இந்த செயலணி நியமிக்கப்பட்டுள்ளது.

## இந்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்சி ஆகியவை இந்தப் பயணத்தின்போது இடம்பெறவுள்ளன.

இவை தவிர யோகா நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பிளாஸ்டிக் மாசுபாட்டிற்கு எதிரான விழிப்புணர்வை நோக்கிய பயணத்தின் போது கப்பல்கள் கடற்கரையை சுத்தம் செய்தல் மற்றும் நடைபயிற்சி போன்ற சமூக செயற்பாடுகளிலும் இக்கப்பல்கள் ஈடுபடவுள்ளன.

இந்திய கடலோரக் காவல்படை மற்றும்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# மதுபானசாலை அனுமதிப்பத்திர விடயத்தில் இந்த ஆளும்தரப்பும் லஞ்சம் வாங்கியதா?

## முன்னாள் எம்.பி. சுமந்திரன் சந்தேகம்




மதுபானசாலை அனுமதிப்பத்திர விவகாரத்தில் அரசியல் லஞ்சம் வழங்கப்பட்டதாககூறிவிட்டு இப்பொழுது, அந்த விடயத்திலிருந்து பின்வாங்குவது, இந்த அரசாங்கம் மீதும் ஊழல் தொடர்பில்பாரியசந்தேகத்தை எழுப்புகின்றது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த வருடத்தில் 361 மது பான சாலை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருப்பது தொடர்பாக அரசாங்கம்நாடாளுமன்றத்தில் ஒருதகவலைவெளியிட்டுள்ளது.

ஆனால் இந்த அரசாங்கம் பதவிக்குவருவதற்குமுன்னதாக, இவ்வாறான மதுபான சாலை உரிமைப்பத்திரங்கள் வழங்குவதில் அரசியல் லஞ்சம் இருப்பதாக சொல்லியிருந்தார்கள். அப்போது நாடாளுமன்றஉறுப்பினர்களாக இருந்த பலரது சிபாரிசின் அடிப்படியில் ஏராளமான மதுபானசாலைகளுக்கான உரிமைப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என சொல்லியிருந்தார்கள்.

அந்தஅரசியல்லஞ்சம்என்ற விவகாரத்தில் தங்கள் பதவிக்கு வந்துமூன்றுநாள்களில்வெளிப் படுத்துவோம்என்றும்கூறியிருந்தார்கள். ஆனால், இரண்டு, மூன்று மாதங்கள் ஆகியும் யார் யாருக்கு உரிமை பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மாத்திரம்தான் வெளிப்படுத்தியுள்ளனர்.

இது அனைவருக்கும் ஏற்கனவேதெரிந்தவிடயம்தான். யாருடைய சிபாரிசில் இந்த உரிமை பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளனஎன்பதைவெளிப் படுத்தினால் தான், அரசியல் லஞ்சம் வழங்கப்பட்டமை என்பதைஉறுதிசெய்யமுடியும்.

ஆகவே, லஞ்சம், ஊழல் அனைத்தையும்முற்றுமுழுதாக ஒழித்துவிடுவோம் என்று கூறி பதவிக்கு வந்த இந்த அரசாங்கம், மதுபானசாலை அனுமதிப்பத்திர விடயத்தில் சற்றுப் பின்வாங்குவதாக தோன்றுகிறது. எமது பிரதேசங்களைபொறுத்தவரை 9 ஆவது நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்த இருவர் தாங்களாகவே சிபாரிசு செய்தோம் என்பதை ஒத்துக்கொண்டுள்ளனர்.

ஆனால்,ஒவ்வெருமதுபான சாலைகளும் யாரோ ஓர் அரசியல்வாதியின் சிபாரிசின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்பதை, அரசாங்க கட்சியே தேர்தலுக்கு முன்னர் குற்றஞ்சாட்டியிருந்தது. அப்படியானால், அந்த பெயர் பட்டியலை அரசாங்கம் வெளியிடவேண்டும். இதுவொரு பாரதூரமான விடயம். இதனை நாங்கள் தொடர்ச்சியாக கூறிவருகின்றோம்.

முக்கிய முறைப்பாடு ஒன்றை தேர்தலுக்கு முன்னர் கூறிவிட்டு, அதாவது அரசியல் லஞ்சம் வழங்கப்பட்டதாக கூறிவிட்டு இப்பொழுது அந்த விடயத்திலிருந்து பின்வாங்குவது, இந்த அரசாங்கம் மீதும் ஊழல் தொடர்பான பாரிய சந்தேகம் ஒன்றை எழுப்புகின்றது. இவர்களுக்கும் லஞ்சம் கொடுத்து இந்த தகவல்கள் மறைக்கப்படுகின்றனவா என்ற கேள்விகள் எழுகின்றன. - என்றார்.

# கிண்ணியாவில் வெள்ளத்தால் அழிவடைந்த வேளாண்மை வயல்கள் அழிவுகள் கணிப்பீடு

( ஹலால்தீன்)





கிண்ணியா பிரதேசத்தில் வெள்ளத்தால் அழிவடைந்த வேளாண்மை வயல் நிலங்களை கண்கானித்து கணிப்பீடு செய்வதற்கு கொழும்பில் இருந்து வருகைதந்த கமநல காப்புறுதிசபை குழுவினர் குறிஞ்சாகேணி கமநலசேவை பிரிவுக்குட்பட்ட விவசாய கண்டங்களுக்குவியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு சென்று பார்வையிட்டு அறிக்கையிட்டு வருகின்றனர்.

கிண்ணியாகுறிஞ்சாக்கேணி கமநல நிலையத்தின் கீழ் உள்ள வன்னியனார் மடு விவசாய சம்மேளனத்தின் கீழ் உள்ள பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் திருகோணமலை கம தொழில் மற்றும் கமநல காப்புறுதி உயர் அதிகாரிகள், கொழும்புகமத்தொழில்மற்றும் கமநல காப்புறுதி பனிப்பாளர்கள் நேரடியாக களத்துக்கு வந்து சேத விவரங்களை மதிப்பீடு செய்தனர்.

கிண்ணியா குறிஞ்சாக்கேணி உதவி அபிவிருத்திஉத்தியோகத்தர்ஜுனைதீன்ஷாஜித் தலைமையில் கள விஜயம் நடைபெற்றன.

இங்கு விவசாயிகள் கருத்து தெரிவிக்கையில் -

கடந்த காலங்களில் வெள்ள அனர்த்தம் காரணமாக தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. விவசாயிகள் கடன் பட்டு அடகு வைத்து சிரமத்துக்கு மத்தியில் வேளாண்மை செய்த போதும் அது அழிவுற்றது இதற்கு அரசாங்கம் கூடிய கவனம் செலுதி நட்ட ஈட்டைவழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

# முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் முழக்கம் மஜீத் காலமானார்

(நூருல் ஹுதா உமர்)



இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் ஏ.எல். அப்துல் மஜீத் (முழக்கம் மஜீத்) காலமானார்.

நீண்டகாலமாக சாய்ந்தமருதில் அமைந்துள்ள தனது வீட்டில் சுகவீனமுற்றிருந்த அவர் வீட்டில்லியாழக்கிழமை மாலை காலமானார்.

அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் வெள்ளி காலை 09.00 மணி அளவில் இடம் பெற்றதுஎனஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

# நிலாவெளி விவசாயிகளுக்கு இலவசப் பசளை கிடைத்தது

(ஹஸ்பர்)



திருகோணமலை மாவட்ட நிலாவெளி கமநல சேவை பகுதிக்குட்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் எம்ஓபி பசளை விநியோக நடவடிக்கை வியாழக்கிழமைஇடம்பெற்றது. குறித்த உர விநியோகம் நிலாவெளி கமநல சேவை நிலையத்தில் வைத்துபதில்கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ரமேஷ் தலைமையில் இடம்பெற்றது.

3417 ஏக்கர் பெரும்போக நெற்பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்டது மேலும் சிறுநீர்பாசனம்பெரியநீர்ப்பாசனத்துக்கு ஓர் ஏக்கருக்கு 12 கிலோவும் மானாவரிக்கு ஓர் ஏக்கருக்கு 10 கிலோவும் வழங்கி வைக்கப்பட்டன.

12கமக்காரஅமைப்புக்களை சேர்ந்த விவசாயிகளுக்கு குறித்த இலவசபசளைவழங்கி வைக்கப்பட்டன.



# கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவின் விளையாட்டு கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கி வைப்பு!

வடமாகாணவிளையாட்டுதிணைக்களத்தின் ஏற்பாட்டில், கரைச்சி பிரதேச மட்ட விளையாட்டு போட்டியில் முதலாம் இரண்டாம் இடங்களைபெற்றவிளையாட்டுகழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

வட மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் தெரிவுசெய்யப்பட்ட 9 கழகங்களுக்கு முதற்கட்டமாக குறித்த உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் றிச்சாட் மோகனதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) இ.நளாஜினி மற்றும் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் பா.முகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டு விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

இந் நிகழ்வில் விளையாட்டு பிரிவு உத்தியோகத்தர்கள், வடமாகாணவிளையாட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் விளையாட்டு கழகங்க அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நேர்மையற்ற பதில்

இலங்கை அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவின் இந்தியப் பயணத்தின்போது வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் எதுவும் கருத்துத் தெரிவிக்கப்படாதது ஏன் என்று அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத்திடம் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு, "அரசமைப்பில் 13 ஆவது திருத்தம் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே, அது தொடர்பில் புதிதாகப் பேசுவதற்கோ, அதனைக் கூட்டறிக்கையில் உள்ளடக்குவதற்கோ தேவையில்லை" என்று பதிலளித்திருக்கின்றார்.

அரசுத் தலைவரின் இந்தியப் பயணத்தில் உடன் இருந்தவர் விஜித ஹேரத். அந்தப் பயணம் குறித்து செய்தியாளர்களுக்கு விளக்கம் அளிக்கும்போது நேற்று அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். இலங்கை அரசுத் தலைவரின் இந்தியப் பயணத்தில் இரு நாட்டுத் தலைவர்களும் இணைந்து விடுத்த கூட்டறிக்கையில் ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்தோ அரசமைப்பின் 13ஆவது திருத்தம் குறித்தோ எதுவும் சொல்லப்பட்டிருக்கவில்லை. ஆனால், இந்த விடயங்கள் தொடர்பில் அநுரகுமார திசநாயக்கவிடம் தான் வலியுறுத்தியிருக்கிறார் என்று இந்தியப் பிரதமர் மோடி தனது பேச்சில் தெரிவித்திருந்தார்.

மோடியின் பேச்சிலும் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் குறித்து எதுவும் சொல்லப்படவில்லை. பதிலாக அரசமைப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது, தமிழர்களின் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கும் மாகாண சபைகள் தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையிலேயே கூட்டறிக்கையில் ஏன் 13 குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்ற கேள்வி எழுப்பப்பட்டது. அந்தக் கேள்வி எழுவதற்கும் ஒரு பின்னணிக் காரணம் இருக்கின்றது. ஆளும் தேசிய மக்கள் சக்தியின் முதுகெலும்பான ஜேவிபியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கொழும்பு வீரகேசரி வார இதழுக்கு வழங்கிய பேட்டியில் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் நீக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார். பின்னர் புதிய அரசமைப்பு ஒன்று வரும் வரைக்கும் மாகாண சபைகள் நீடிக்கும் என்று ஆளும்தரப்பு சமாளித்தாலும், 13ஆவது திருத்தம் மாகாண சபைகள் என்பவற்றுக்கு எதிராக நீண்டகாலமாவே ஜேவிபி எதிர்ப்புக் காட்டி வந்திருக்கின்றது. இதனாலேயே கூட்டறிக்கையில் 13 தவிர்க்கப்பட்டி-ருக்கலாம் என்று சந்தேகம் ஏற்படுவது இயல்பானதே.

இந்தக் கேள்விக்கு பதிலளித்த அயலுறவுத்துறை அமைச்சர், 13 ஏற்கனவே அரசமைப்பில் இருப்பதால் அது பற்றிப் பேசவேண்டிய தேவை எதுவுமில்லை என்று தெரிவித்திருக்கின்றார். அதுபற்றிக் கூட்டறிக்கையில் குறிப்பிடவேண்டிய அவசியமில்லை என்றும் கூறியிருக்கின்றார். அவர் சொல்வது என்னவோ உண்மைதான். ஆனால், அரசமைப்பில் 36 வருடங்களுக்கு முன்னர் அரசமைப்பில் உள்வாங்கப்பட்ட 13ஆவது திருத்தத்தில் சொல்லப்பட்டுள்ள விடயங்களைக்கூட, குறிப்பாக காணி மற்றும் பொலிஸ் தொடர்பில் மாகாணங்களுக்கு தரப்பட்ட சில விடயங்கள்கூட இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதும், அதனை இனியும் நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று ஜேவிபி இப்போதும் கூறுவதும் அமைச்சருக்குத் தெரியாததல்ல. இந்தவிடயத்தில் முழுப்பூசனிக்காயை சோற்றுக்குள் மறைப்பதற்கு ஒப்பானதே அவரது பதில்.

அரசுத் தலைவர் தேர்தலின்போது யாழ்ப்பாணம் வந்து தமிழ் அரசுக் கட்சியுடன் பேச்சு நடத்திய அநுரகுமார திசநாயக்க, அந்தக் கட்சியின் ஆதரவைப் பெறுவதற்கு 13ஐத் தான் முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்பதை ஒரு வாக்குறுதியாகவே முன்வைத்தார் என்பதும் அமைச்சருக்குத் தெரியததல்ல. ஆனால் அது பற்றி அவர் தெற்கில் வாய் திறக்காதது ஏன் என்பது தமிழர்களுக்குப் புரியாததுமல்ல.

இப்படி 13 முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதும், அது தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வாக இல்லாமல் இருப்பதுமே அது பற்றிய பேச்சுக்களும் கேள்விகளும் தொடர்வதற்கான காரணம் என்பதும் அமைச்சருக்குத் தெரிந்த விடயம்தான். அப்படியிருக்கும்போதும் பொறுப்பற்ற தனமாக, அரசமைப்பில் இருப்பதால் 13 பற்றி பேசவேண்டிய தேவையில்லை என்று சொல்வது கண்டனத்துக்குரியது. ஏற்றுக்கொள்ள முடியாதது. பிரச்சினையை நேர்மையாக அணுக முடியாது சாக்குப்போக்குச் சொல்பவர்களால் அந்தப் பிரச்சினைக்குச் சரியான தீர்வை ஒருபோதும் காணமுடியாது. அமைச்சரின் பதிலையும் அந்த வகையிலானதாகவே பார்க்கவேண்டியுள்ளது.

## சட்டவிரோத நிதி திட்ட நிறுவனங்களின் விவரம் மத்திய வங்கியினால் அறிவிப்பு

சட்டவிரோத நிதி திட்ட நிறுவனங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த நிறுவனங்களில், சில நிறுவனங்கள் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

ஏனைய நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் நோக்கில் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள தடைசெய்யப்பட்ட திட்டங்களுடன் தொடர்புடைய நிறுவனங்கள் பின்வருமாறு...

01. Tiens Lanka Health Care (Pvt) Ltd
02. Best Life International (Pvt) Ltd
03. Mark-Wo International (Pvt) Ltd
04. V M L International (Pvt) Ltd
05. Fast3Cycle International (Pvt) Ltd
06. Sport chain app. Sport chain zs society Sri Lanka
07. Onmax DT
08. MTFE App, MTFE SL Group, MTFE Success Lanka, MTFE DSCC Group
09. Fastwin (Pvt) Ltd.
10. Fruugo Oline App/Fruugo Oline (Pvt) Ltd.
11. Ride to Three Freedom (Pvt) Ltd.
12. Qnet
13. Era Miracle (Pvt) Ltd and Genesis Business School
14. Ledger Block
15. Isimaga International (Pvt) Ltd.
16. Beecoin App and Sunbird Foundation
17. Windex Trading
18. The Enrich Life (Pvt) Ltd
19. Smart Win Entreprenuer (Private) Limited
20. Net Fore International (Private) Limited / Netrrix

## சங்கானைப் பிரதேச மருத்துவமனை தேவை குறித்து ஆளுநருடன் சந்திப்பு

சங்கானை பிரதேச மருத்துவமனையின் தேவைப்பாடுகள் தொடர்பில் சங்கானை பிரதேச மருத்துவமனை அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனுடன் வியாழக்கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், சங்கானை பிரதேச மருத்துவமனை நோயாளர்களின் நலன்கருதி கடந்த காலங்களில் இடம்பெற்ற அரச மற்றும் தனியார் பேருந்துச் சேவைகளை மீள இயக்குமாறு அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சங்கானை பிரதேச மருத்துவமனையை தரம் உயர்த்துமாறும் அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டதுடன், மருத்துவமனையில் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு நிலையத்துக்கு தனியான கட்டடம் அமைப்பதற்கான நிதி உதவிக்கும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இவை தொடர்பில் சாதகமான நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.





# அரசமைப்பை அமுல்படுத்தக்கோரும் இந்திய அரசின் மாற்றம் நல்லதுதான்

## வரவேற்கிறார் தமிழ் அரசுக் கட்சிப் பேச்சாளர் சுமந்திரன்

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் என்று குறிப்பிடாது அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி இந்தியா கூறியிருப்பது நல்ல மாற்றம்தான் என்று தெரிவித்துள்ளார் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன்.

வடமராட்சியில் உள்ள யாழ். ஊடக இல்லத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே அவர் இதனைத் தெரிவித்தார். அண்மையில் இலங்கை ஜனாதிபதியை சந்தித்தபோது இந்திய தரப்பு 13 ஐ நேரடியாக வலியுறுத்தாததன் பின்னணி என்னவாக இருக்கும் என அவரிடம் ஊடகவியலாளர்கள் கேட்டபோது, 13 என்று பிரித்துச் சொல்கின்றபோது அதிலே ஒரு மயக்கம் ஒன்று சில வேளைகளில் ஏற்படும். ஏதோ 13 என்பது அரசமைப்பிற்கு அப்பாற்பட்டது அது ஒரு பின்னிணைப்பு என்பதை போல சிலர் சிந்திக்கக்கூடும். ஆகையினாலே இந்த 13 என்றதை சொல்வதை நாங்கள் தவிர்த்து இருக்கின்றோம்.

நாட்டில் உள்ள அரசமைப்பை முற்று முழுதாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதுதான் 13 என்று அதை வேறாக சுட்டி காட்டினால் அது ஏதோ அரசமைப்பில் இல்லாத விடயம் வெளியிலே இருக்கின்ற ஏதோ ஒன்று என்று என்ற தோற்றப்பாடு ஏற்படும்.




ஆகையினாலே இந்திய அரசாங்கமும் தங்களது சொற்பதத்தை மாற்றிக் கொண்டது நல்லது என்றுதான் நான் நினைக்கிறேன். 13 மட்டுமல்ல 16 ஆம் திருத்தமும் மிகவும் முக்கியமானது. எங்களது தமிழ் மொழி உரிமைகள் சம்பந்தமான விடயங்கள், மற்றைய திருத்தங்களும் முக்கியமானவை.

ஆகையினாலே நாட்டில் உள்ள அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என சொல்வதுதான் சாலச் சிறந்தது என்பதுதான் எனது கருத்து எனத் தெரிவித்தார்.

தமிழரசி கட்சியில் தலைமைத்துவம் சம்பந்தமான வழக்கு ஏற்கனவே இடம்பெற்று வருகிறது. தற்போது கட்சிக்கு எதிராக ஒரு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதே என ஊடகவியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியது போது, அது தொடர்பில் தனக்கு தெரியாது என்றும் வியாழன் காலை பத்திரிகைவாயில் அதை பார்த்ததாகவும் அவர் தெரிவித்தார்.

## வவுனியா வைத்தியசாலையில் நாய் வாயு துப்பாக்கியால் சுட்டுகொலை

வவுனியா வைத்தியசாலையில் நாய் ஒன்று வாயு துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரே சுட்டுக் கொலைசெய்துள்ளார் எனவிசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் நாய் காப்பகம் ஒன்றை நடத்தி வருபவர் வைத்தியசாலை பணிப்பாளரிடம் வெள்ளிக்கிழமை முறைப்பாடு செய்துள்ளார். இது குறித்த விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பணிப்பாளர் இதன்போது உறுதியளித்துள்ளார்.

## நெடுந்தீவு கடலில் கைதான 8 தமிழக மீனவருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், கடந்த 8ஆம் திகதி கைது செய்யப்பட்ட 8 தமிழக கடற்றொழிலாளர்களுக்கும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்து ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் வழக்கு நேற்று (வெள்ளிக்கிழமை) ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, கைது செய்யப்பட்ட 8 கடற்றொழிலாளர்களும் சிறைச்சாலை அதிகாரிகளால் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

அதனையடுத்து, அவர்களை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்றின் பதில் நீதிவான் சாளினி ஜெயபாலச்சந்திரன் உத்தரவிட்டுள்ளார்.



# தற்பாதுகாப்பிற்காக ஒருவருக்கு ஒரு துப்பாக்கி மாத்திரமேயாம்

## பாதுகாப்பு அமைச்சு தகவல்

பொதுமக்களுக்குதற்பாது காப்பிற்காக ஒருவருக்கு ஒரு துப்பாக்கி மட்டுமே வழங்கப் படும். மேலும் அது புலனாய் வவுத்துறை அறிக்கைகளுக் கமைய மேற்கொள்ளப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பொதுமக்களுக்குதற்பாது காப்பிற்காகவழங்கப்பட்டுள்ள அனைத்து வகையான துப்பாக்கிகள் மற்றும் தோட் டாக்களை தற்காலிகமாக மீளப்பெறுதல் குறித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது -

தற்பாதுகாப்பிற்காக பொதுமக்களுக்கு பாதுகாப்பு அமைச்சால் வழங்கப்பட்ட அனைத்து வகையான துப்பாக்கிகள் மற்றும் தோட் டாக்களை கடந்த நவம்பர் 21ஆம் திகதிக்கு முன்னர் அளவு மதிப்பாய்வுக்காக அரசாங்கத்திடம் திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே அறிவித்துள்ளது. இவ்வறிவிப்புக்கு அமைய, அனுமதி பத்திரம் பெற்றவர் களில் 85 சதவீதமானோர் துப்பாக்கிகளைமீளஒப்படைத் துள்ளனர்.

மேலும், அவர்கள் தொடர்ந்தும்துப்பாக்கிகளை வைத்திருக்க விரும்பினால், அதன்அவசியத்தைவிளக்கிஒக் ரோபர்30ஆம்திகதிக்குமுன்னர் பாதுகாப்பு அமைச்சிடம் மேல் முறையீடுகளைசமர்ப்பிக்கவும் அவர்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டிருந்நது. அந்த மேல் முறையீடுகளைச் சமர்ப்பித்த உரிமதாரர்களின் துப்பாக்கிகளைஆய்வுசெய்வ தற்கும் மறுபரிசீலனை செய்வதற்கும் துப்பாக்கிகள் மற்றும்அவற்றின்ஆவணங்களை பாதுகாப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்குமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

தற்பாதுகாப்பிற்காக ஒருவருக்கு ஒரு துப்பாக்கி மட்டுமே வழங்கப்படும் என்பதுபாதுகாப்புஅமைச்சின் முடிவாகும், மேலும் அது புல னாய்வவுத்துறை அறிக்கைக ளுக்கமைய மேற்கொள்ளப் படும். துப்பாக்கிகள் தொடர்பான அனைத்து மேல் முறையீடுகள் மற்றும் துப்பாக்கி தொடர்பான ஆய்வுகள் 2025 ஜனவரி 20 அன்று முடிவடையும் என்றும், மற்றும் அனுமதி பத்திரம் அந்தத் திகதிக்கு முன்னர் துப்பாக்கிகளை ஆய்வுக்காக சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கடந்தகாலங்களில்இலங்கை இராணுவம்மற்றும்பொலிஸா ரும் குறிப்பிடத்தக்களவு துப்பாக்கிகள் மற்றும் தோட் டாக்களை வழங்கியுள்ளமை அவதானிக்கப்பட் டுள்ளது. எனவே, டிசெம்பர் 31 ஆம் திக திக்கு முன்னர் அந்த துப்பாக் கிகள் மற்றும் தோட்டாக்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்கு மாறு பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

எனவே, அறிவுறுத்தல் களைப்பின்பற்றி,துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில்ஒப்படைக்குமாறு அறிவிக்கப்படுகிறது. குறித்த திகதிக்கு முன்னர்துப்பாக்கிகள் கணக்கெடுப்புஃஆய்வுக்கு உட்படாத உரிமதாரர்களுக்கு எதிராக 1916 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க துப்பாக்கிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சால் எடுக்கப்பட்ட இந்தத்தீர்மானத் தின்படி, சிவில் சமூகத்தில் துப்பாக்கிப் பாவனை மற்றும் துஷ்பிரயோகத்தை கட்டுப்படுத்தி பாதுகாப்பான சமூகத்தைஉறுதிசெய்வதற்காக, பாதுகாப்பு அமைச்சால் எடுக்கப்பட்ட இந்த முடிவுக்கமைய,இதுவரைக்கும் ஒப்படைக்கப்படாத அனைத்து அனுமதி பத்திரம் பெற்ற துப்பாக்கிகளும் 2025 ஜனவரி 20 திகதிக்கு முன் ஆய்வுக்காகஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். தவறினால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



## அமெரிக்கத் தூதரகம் முன்பாக போராட்டம்

பாலஸ்தீனத்தில் இனப்படுகொலையை நிறுத்து எனும் தொனிப்பொருளில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் மற்றும் ஐக்கிய தொழிலாளர் கூட்டமைப்பு இணைந்து நடத்திய போராட்டம் கொள்ளுப்பிட்டியில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு முன்பாக நடைபெற்றது.

# மியன்மார் அகதிகள் 115 பேரையும் திருமலையில் தங்கவைக்க ஏற்பாடு



(ஹஸ்பர்)

மியன்மார் - ரோஹிங்ய நாட்டை சேர்ந்த 115 நபர்கள் படகு மூலம் இலங்கை கடற்பரப்பின் முல்லைதீவு பகுதியில் வியாழக்கிழமை கடற்படையினரும் மீனவர்களும் இணைந்து மீட்டனர்.

இவர்கள் நேற்று திருக்கோணமலை கடற்படைக்குஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் திருகோணமலை அஷ்ரப் இறங்கு துறையில் அவர்களுக்கான மருத்துவ பரிசோதனை இடம் பெறுற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த படகில் 120 நபர்கள் பயணித்திருந்த நிலையில் ஐவர் சர்வதேச கடற்பரப்பின் நடுக்கடலில் படகில் உயிரிழந்தமையால் அவர்களை கடலில் வீசியதாக ஆரம்ப கட்ட விசாரனை மூலம் தெரியவருகிறது.

இதில் படகு ஓட்டுநர், உதவியாளர் என 12 நபர்களை ஆட்கடத்தல் எனும் பெயரில் விசாரனை இடம் பெறுவதுடன் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இலங்கைக்கு வரும் எண்ணத்தில் பயணிக்கவில்லை எனவும் தெரியவருகிறது. குறித்த மிகுதியான 103 நபர்களையும் திருகோணமலை மாவட்ட செயலகம் ஊடாக திருகோணமலை திஃஜமாலியா வித்தியாலயத்தில் தங்க வைக்க ஏற்பாடுகள் இடம் பெறுவதாக துறை சார் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதில் படகு ஓட்டுனர் உதவியாளர் என 12 நபர்களும் விசாரனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். குறித்த படகில் சிறுவர்கள், பெண்களும் உள்ளடங்குவர்.

# மலேசியாவில் நடைபெறவுள்ள தூர நோக்குடைய தலைவர்கள் விருதுக்கு இலங்கையிலிருந்து அதிபர் முஹம்மட் அன்ஸார் தெரிவு!

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

ஹெல்ப் யூனிவர்சிட்டி அனுசரணையில்மலேசியாவில் எதிர்வரும்ஜனவரி 18ஆம்திகதி நடைபெறவுள்ள மாநாட்டில் இலங்கையராகமருதமுனையை சேர்ந்த அதிபர் அலியார் முஹம்மட் அன்ஸார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தரவுகள், வினாக்கள், விளக்கங்கள் என்பவற்றின் அடிப்படையில் இணையவ ழியில் தெரிவு செய்யப்பட்ட உலகின் 48 நாடுகளின் பிரதிநிதிகளில் ஒருவராக இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்..

கல்முனை கல்வி வலயத்திற் குட்பட்ட கமு/புலவர்மணி சரிபுத்தீன் மகா வித்தியால யத்தின் அதிபரான முஹம்மட் அன்ஸார், 1992 இல் இலங்கை ஆசிரியர் சேவையில் இணைந்து கொண்டதுடன் 1995இல் இலங்கை ஒலிபரப் புக்கூட்டுத்தாபன பகுதிநேர அறிவிப்பாளராகவும் தெரிவா னார். 2012 முதல் இலங்கை அதிபர்கள் சேவைக்கு தெரிவுசெய்யப்பட்டார்.

இவர், கல்விமாணிப் பட்டத்தோடுபட்டப்பின்கல்வி முகாமைத்துவ டிப்ளோமா, மனிதவள அபிவிருத்தி முகாமைத்துவ டிப்ளோமா பட்டங்களையும்பெற்றுள்ளார்.

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் பிரதி அதி பராகவும் சாய்ந்தமருது ரியாழுல் ஜன்னா வித்தியா லயத்தின் அதிபராகவும் கடமையாற்றி உள்ளதோடு தான் கடமையாற்றிய பாடசாலைகளை வலயத்தில் பேசும் முதல் நிலைப் பாடசா லைகளாக மாற்றி கல்விச் சமூகத்தின் நன்மதிப்பை பெற்றவராவார்.

தொலைக்காட்சி, வானொலி அறிவிப்பாளராக நிகழ்ச்சிகள் படைத்து நேயர்களின் மனம் வென்ற அன்ஸார்,ஆசிரியராகஅதிபராக கடமை புரிந்து மாணவர் கள்,ஆசிரியர்கள்,பெற்றோர்கள் என மக்களின் மனதை வென்று வருகிறார்.

மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர், அலியார் - றாகிலும்மா தம்பதிகளின்



புதல்வராவார். மருதமுனை கல்விச் சமூகம் தமது பாராட்டுக்களையும்வாழ்த்துக் களையும் தெரிவித்துள்ளன.

# கொழும்பு நகர மண்டபத்தில் நத்தார் பண்டிகை நிகழ்வு

புத்தசாசனம், மத மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சு, மேல் மாகாண ஆளுநர் அலுவலகம் மற்றும் கொழும்பு மாநகர சபை ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த 2024 ஆம் ஆண்டு நத்தார் பண்டிகை நிகழ்வு வியாழக்கிழமை கொழும்பு நகர மண்டபத்தில் நடைப்பெற்றது.

இந்நிகழ்வில் புத்தசாசனம், மத விவகாரங்கள் அமைச்சர் சுனில் செனவி, மேல்மாகாண ஆளுநர் ஹனிப் யூசுப், உட்பட அரசியல் பிரமுகர்களும், சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா உட்பட சர்வ மதத் தலைவர்கள் கலந்துக் கொண்டனர்.










# பலஸ்தீனர்களைக் கொன்ற இஸ்ரேலிய படையினரை உடன் கைதுசெய்யுங்கள்

## இலங்கை அரசிடம் 'த ஹின்ட் ரஜாப் பவுன்டேஷன்' வலியுறுத்து

பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டமைக்கும், உயிரிழந்தோரின் சடலங்கள் அவமரியாதை செய்யப்பட்டமைக்கும் பொறுப்புக்கூறவேண்டிய இஸ்ரேலிய இராணுவ வீரரான கல்ஃபெரென்புக் என்பவர் கொழும்பில் இருக்கிறார் எனவும், அவரைக் கைதுசெய்வதற்கு இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் 'தி ஹின்ட் ரஜாப் பவுன்டேஷன்' வலியுறுத்தியுள்ளது.

'த ஹின்ட் ரஜாப் பவுன்டேஷன்' என்பது இஸ்ரேலின் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை முடிவுக்குக்கொண்டுவருவதுடன், காஸாவில் கொல்லப்பட்ட சகலரையும் நினைவுகூரும் நோக்கில் பெல்ஜியத்தைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் அரச சார்பற்ற அமைப்பாகும்.

குறித்த அமைப்பானது பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டமைக்கும், அவ்வாறு கொல்லப்பட்டோரின் சடலங்கள் அவமரியாதை செய்யப்பட்டமைக்கும் பொறுப்புக்கூறவேண்டிய இஸ்ரேலிய இராணுவ வீரரான கல் ஃபெரென்புக் என்பவர் கொழும்பில் இருப்பதாக தமக்கு அறியக்கிடைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமன்றி அவரை உடனடியாகக் கைதுசெய்வதற்கும், இவ்விவகாரத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அவ்வமைப்பு இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

மேலும் இதுகுறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முறைப்பாடளித்திருக்கும் 'த ஹின்ட் ரஜாப் பவுன்டேஷன்', குறித்த இராணுவ வீரருக்கு எதிராக சிவப்பு அறிவிப்பை வெளியிடுவது பற்றி இன்டர்போலுடனும் கலந்துரையாடியுள்ளது.


# மரண அறிவித்தல்



காரைநகர் விளானை களபூமியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகும் கொண்ட முன்னாள் காரைநகர் சமுத்தி உத்தியோகத்தரும் தற்போதைய ஊர்காவற்துறை சமுர்த்தி முகாமையாளருமான

## அமரர். சிவஞானம் கபிலன்

அவர்கள் 20.12.2024 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

மலர்வு 1983 04 09

உதிர்வு 2024 12 20

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர் ( காரைநகர் பிரதேச சபை) சிவஞானம் மற்றும் கமலாதேவி தம்பதியினரின் பாசமிகு மகனும், ஜெசோனா (ஜஸோ) அவர்களின் பாசமிகு கணவரும், மகாலிங்கம் ஜெயமலர் தம்பதியினரின் அன்பு மருமகனும், ரக்ஷிகா, யஸ்விகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிஷாந்தி (இலண்டன்) அவர்களின் பாசமிகு சகோதரரும், பிரசாந்தினி, ஹிசோத் ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம், தங்கம்மா இராமலிங்கம், பூரணம் (ஆசிரியை) ஆகியோரின் அன்பு பேரனும், மனோகரன், தனுஷா, தர்ஷிகா, கோபி, துஸ்ந்தன் (அவுஸ்ரேலியா), துஸிகா (அவுஸ்ரேலியா), ஜெனிஷ்ரன் (பெல்ஜியம்), ஜெனிற்றா, ஜெயமதி, ஜெசித்தா, சுரேஷ் (இலண்டன்) ஆகியோரின் மைத்துனரும், கனகலிங்கம் அவர்களின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன், குகதாசன் மற்றும் அம்பிகைபாகன், பாலகிருஸ்ணன் ஆகியோரின் பாசமிகு மருமகனும், விபிஷா, ராகுல் ஆகியோரின் பாசமிகு தாய்மாமனும், பிரணவி, கபிசாந், யஸ்மிகா, கரிஷ்ணவி ஆகியோரின் சித்தப்பாவும், பத்மபிரகாஷ், தவநீதன் ஆகியோரின் சகலனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் அவரது இல்லத்தில் இடம்பெற்று 22.12.2024 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 06.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக தில்லை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

காலைக்கதிர் Kalaikkathir

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் திறனைப் பற்றிய விழிப்புணர்வை மக்களுடன் பகிர்ந்து கொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும், இலங்கை கடலோர பாதுகாப்பு பணியாளர்களுக்கு அவற்றை பார்வையிட அனுமதி வழங்கப்படவுள்ளது.

பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பிற்கான பகிரப்பட்ட சவால்களை திறம்பட எதிர்கொள் வதற்காக இலங்கை கடலோர பாதுகாப்பு படையின் திறன்களை மேம்படுத்துவதற்கு இந்தியாவிற்கும்இலங்கைக்கும்இடையிலான ஒத்துழைப்பின் சாத்தியக்கூறுகளை கருத்தில் கொண்டு இந்த கப்பல்களின் விஜயம் அமைந்துள்ளது.

## விவசாய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன். இந்த விடயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு மாகாண விவசாயத் திணைக்களமும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்என்று அவரது ஊடகப்பிரிவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் துறைசார் மீளாய்வுக் கூட்டம் ஆளுநர் செயலகத்தில் வெள்ளிக்கிழமை மாலை ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

'1970ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் எமது மாகாணம் விவசாயத்தில் கோலோச்சியதைப்போன்ற நிலைமை மீண்டும் ஏற்பட வேண்டும். தற்போதைய சூழலுக்கு ஏற்ப எமது விவசாய முறைமைகள் மாற்றமடையவேண்டும்.இளையோரிடத்திலும் விவசாயத்தை ஊக்குவிக்கவேண்டும்' என ஆளுநர் தனது ஆரம்ப உரையில் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண விவசாயத்துறை மேம்பாட்டுக்காக வழங்கப்படும் உபகரணங் களை உச்ச அளவில் பயன்படுத்தவேண்டும் என வலியுறுத்திய ஆளுநர் அதன் ஊடாக ஏற்றுமதியை நோக்கி உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

எத்தனை விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை ஓராண்டில் உயர்த்த முடியும் என்ற இலக்கைநிர்ணயித்துவிவசாயத்திணைக்களம் செயற்படவேண்டும் என்றும், 2025ஆம் ஆண்டு அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு சாதகமான நிலைமைகள் காணப்படுவதால் அதைச் சரிவரப் பயன்படுத்தவேண்டும் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

அதேநேரம் எமது பிரதேசத்திலுள்ள ஏழைகள் இன்றும் ஏழையாக இருப்பதற்கு அதிகாரிகளே காரணம் எனத் தெரிவித்த ஆளுநர், எங்களால் செய்ய முடியாதது என்று எதுவுமில்லை என்ற எண்ணம் அதிகாரிகளிடத்தில் மலரவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணம் நெல் உற்பத்தியில் தன்னிறைவுநிலையில் உள்ளதாக விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார். அத்துடன் சின்ன வெங்காயத்துக்கு நிர்ணயவிலையை விவசாயிகள் கோருகின்றனர் எனவும் குறிப்பிட்டார். இதேவேளை கடந்த அனர்த்தங்களின்போது நெற்பயிரழிவுதொடர்பான சேத விவரங்களை 4 திணைக்களங்கள் இணைந்து மீளாய்வு செய்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் விவசாயிகள் தமது உற்பத்திக்கான செலவு அதிகரித்துச் செல்வதாகக் குறிப்பிடுகின்றனர் எனவும், வன விலங்குகளால் ஏற்படும் சேதமும் அதிகரித்துச் செல்வதாகவும் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர், எலிக்காய்ச்சல் விலங்குகளுக்கும் பரவும் நிலை ஏற்பட்டிருப்பது தொடர்பிலும் அதைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாகவும் விளக்கமளித்தார்.

மேலும் சாரதிகள், தொழில்நுட்ப அலுவலர்கள் பற்றாக்குறை தொடர்பிலும் திணைக்களத்தலைவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு ஆளுநர் மற்றும் பிரதம செயலர் ஊடாக தீர்வு முன்வைக்கப்பட்டது.

இறுதியில், அடுத்த ஆண்டு புத்தாக்க சிந்தனையுடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் ஒதுக்கப்படும் நிதி எந்தக் காரணம் கொண்டு திரும்பிச் செல்வதற்கு அனுமதிக்கக் கூடாது எனவும் ஆளுநர் வலியுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலராகப் பதில் கடமையாற்றும் எழிழரசி , வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலர் சிறி, விவசாய திணைக்களப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் வசீகரன், நீர்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் எந்திரி சுதாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## அரசியலாளர்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுற்றுலாத் தொழிலை மேம்படுத்துவதாக கூறிக் கொண்டு அரசியல்வாதிகளுக்கு மதுபான உரிமப் பத்திரங்களை வழங்கிய காலமொன்று இருந்தது. இந்த கலாசாரம் நிறுத்தப்பட வேண்டும்.

நாட்டின் சமூக ஒழுங்கு குறித்து உண்மையான யதார்த்தமான புரிதலை நாம் கொண்டிருக்க வேண்டும். இதை விடுத்து வெறுமனே பேசக் கூடாது. நாட்டில் டொலருக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. அடுத்த ஆண்டு முதல் வட்டியில் ஒரு பகுதியைச்செலுத்தவேண்டும். பிறவெளிநாட்டு கடன்களையும் செலுத்த வேண்டியுள்ளது. இதை அடைவதற்காக நமது நாட்டின் அந்நிய செலாவணிகையிருப்புக்களை உயர்மட்டத்தில் வெற்றிகரமாக பேணவேண்டும்.

இதன் பொருட்டு, சுற்றுலாத் துறையானது அந்நியச் செலாவணியை ஈட்டும் முக்கிய ஏற்றுமதி வணிகங்களில் ஒன்றாகப் பெயரிடப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் அதேவேளை, அதனால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கும், தடுப்பதற்கும் சமச்சீரான வேலைத்திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

கடந்த 3 ஆண்டுகளாக மதுபானசாலை உரிமைப் பத்திரங்கள் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக அல்லாமல் அரசியல் நிலைப்பாட்டை வலுப்படுத்துவதற்காக வழங்கப்பட்டன.

சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதாக கூறிக் கொண்டு, அரசியல்வாதிகளை பலப்படுத்தவும், கட்சி தாவும் நடவடிக்கையை மேற்கொள்வுமே இவை வழங்கப்பட்டு வந்தன. இந்தக் கலாசாரத்திலிருந்து விலகி நல்லொழுக்கமுள்ள நாகரீகமான சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

முறையான கொள்கை உருவாக்கத்துடன், கட்டளைச் சட்டங்கள் மற்றும் வரைவுச் சட்டங்கள் மூலம் மது இல்லாத சிந்தனை மற்றும் கருத்து உருவாக்கப்பட வேண்டும்.

அதன் மூலம் அவை செயல்படுத்தப்பட்டு, பின்பற்றப்பட்டு, கண்காணிக்கப்படவும் வேண்டும். இந்த இலக்குகளை நிறைவு செய்யும் செயற்பாட்டை வெற்றியடையச் செய்வதன் மூலம் அனைவரது அபிலாஷைகளையும் வெற்றிகொள்ள முடியும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# மீனவரின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் கடற்றொழில் அமைச்சருக்குப் பரிந்துரை

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

வடக்குமாகாணமீனவர்கள்எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகஷ்ளை கடற்றொழில் அமைச்சருக்கு பரிந்துரைக் கவுள்ளார்எனவும்விரைவில்தீர்வுகாண்பதற்கு எதிர்பார்க்கிறார் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவித்தார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வடக்குமாகாணமீனவர்கள்எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் தலைமையில் நேற்று இடம்பெற்றது. அது தொடர்பில் ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளதாவது;

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவ சமூகப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்கள், நெக்டா, நாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர், வடக்கு மாகாண காணி ஆணையாளர் ஆகியோரும் பங்கேற்றனர். இவர்களுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமரும் கலந்துகொண்டார்.

ஆரம்ப உரையாற்றிய ஆளுநர், வடக்கு மாகாணத்தின் பிரதான பொருளாதார வளமாக விவசாயம் மற்றும் மீன்பிடி என்பன இருக்கின்ற எனவும் அந்தத் தொழிலை முன்னெடுப்பவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவேண்டும் என்றும் குறிப்பிட்டார். மீனவ சமூகங்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்வது தனக்குத் தெரியும் எனவும், அவை தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு, கடற்றொழில் அமைச்சருக்குப் பரிந்துரைகள் அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். அத்துடன் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் அவர்கள், வடக்கு மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் கூடுதல் அக்கறை செலுத்துவதாகவும் சுட்டிக்காட்டிய ஆளுநர், அவர் ஊடாக எதிர்காலத்தில் இங்கு அடையாளம் காணப்படும் விடயங்களை தீர்த்து வைக்க முடியும என நம்புகிறார் எனவும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் கடலட்டைப்பண்ணைகள் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் மீனவ சமூகப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டன. அதனால் ஏற்படும் கடல்வளப்பாதிப்பு மற்றும் ஏனைய தொழிலை முன்னெடுக்கும் மீனவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. இதேவேளை இதுவரை வழங்கப்பட்ட அனுமதிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைகளை மீளாய்வு செய்வது மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பரிந்துரையும் இங்கு முன்வைக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தின் சில பிரதேசங்களில் பாதுகாப்புத் தரப்பினர் பாஸ் நடைமுறைகளை பின்பற்றுவது தொடர்பிலும் மீனவ சமூகப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். மீனவர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் காப்புறுதி தொடர்பிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் எதிர்கொள்ளும் இழப்புக்கள் மற்றும் அவற்றுக்கு இழப்பீடுகள் வழங்கப்படாமை தொடர்பிலும் மீனவ சமூகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். சட்டத்தால் தடைசெய்யப்பட்ட தொழில்முறைகளை முன்னெடுக்கும் மீனவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுதில்லை எனவும் இதனால் கடல்வளம் அழிந்து செல்வதாகவும் மீனவ சமூகப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.





கடலரிப்பைதடுப்பதற்கானநடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டதுடன் சில பிரதேசங்களில் வான்தோண்டும் நடவடிக்கையும் முன்னெடுக்கவேண்டும் என்றும் மீனவ சமூகப் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

மயிலிட்டித்துறைமுகத்தில் 137 இந்தியப் படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையால் அந்தத் துறைமுகத்தைப் பயன்படுத்துவதில் உள்ள நெருக்கடி தொடர்பாக கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

கிராமிய சங்கம் மற்றும் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இரு அமைப்புக்கள் மீனவர்களைப் பிரதிநித்துவப்படுத்தி இருப்பதால் எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாகவும் மீனவ சமூகப் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

கலந்துரையாடலின் இறுதியில் கருத்து வெளியிட்ட ஆளுநர், கடந்த காலங்களில் இங்கு எவ்வாறான விடயங்கள் நடைபெற்றன என்பது எல்லோருக்கும் தெரியும் என்றும் எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் நடைபெறாமல் இருக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார். அத்துடன் எதிர்காலத்தில் இங்கு ஆராயப்பட்ட விடயங்களின் தொடர்நடவடிக்கைகள் தொடர்பில் மீண்டும் கலந்துரையாடுவதாகவும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# போதைப்பொருள் தடுப்பு தொடர்பில் ஊடக அடிப்படையிலான செயலமர்வு

(பாறுக் ஷிஹான், சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஏற்பாட்டில் ஊடக அடிப்படையிலான போதைப்பொருள் தடுப்பு செயலமர்வு வியாழக்கிழமை சம்மாந்துறை பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின்வடக்குமற்றும்கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி.எம். ரஷாத் ஒருங்கிணைப்பில் போதைப்பொருள் தடுப்பு மற்றும் ஊடகத்துறை சார்ந்த நிபுணர்களின் நுண்ணறிவு விளக்கங்கள்இந்தசெயலமர்வில் இடம்பெற்றதுடன்விவாதங்கள் மற்றும் கேள்வி பதில் அமர்வுகளும் நடைபெற்றன.

போதைப்பொருள்துஷ்பிரயோகம் மற்றும் அதன் அழிவுகரமான விளைவுகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஊடகங்கள் முக்கிய பங்குவகிக்கின்றன. இந்த செயலமர்வில்ஊடகவியலாளர்களின் பங்கேற்பானது போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்குவதற்கான எங்களின் கூட்டு முயற்சிகளுக்கு கணிசமான பங்களிப்பை வழங்கும் என தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி. எம். ரஷாத் தெரிவித்தார்.

இந்தநிகழ்வைசம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி நௌபர் ஆரம்பித்து வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ராசிக் நபாயிஸ், ஏ.ஜெ.எம். இக்ராம் உட்பட ஊடகவியலாளர்கள், சமூக வலைத்தள செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.








காலைக்கதிர் Kalaikkathir

# எனது பெயரைப் பயன்படுத்தி பண மோசடி ; நீதிமன்றம் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது

## முன்னாள் எம்.பி திலீபன் விளக்கம்

எனது பெயரை பயன்படுத்தி எனது அலுவலகத்தில் இருந்தவர் செய்த மோசடிக்காக நான் நீதிமன்றம் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது என வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள்மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நான்பணமோசடி செய்ததாகவும்,கைதுசெய்யப்பட்டதாகவும் பல சமூக ஊடகங்களிலும், ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகியுள்ளன.

நான் அபிவிருத்திக் குழுத் தலைவராக இருந்த போது எனது அலுவலகத்திற்கு பலர் பல தேவைகள் கருதி வருவது வழமை. இதன்போது சில அரசாங்க அதிகாரிகளுக்கு அதனை சிபார்சு செய்து அனுப்புவது வழமை.

ஆனால் முகவர்களாக சிலர் செயற்பட்டு எனது பெயரைப் பயன்படுத்தி பணம் பெற்றுள்ளனர். அவ்வாறானதொரு சம்பவமே நடந்தது.

எனது அவலுகத்தில் இச் சம்பவம் அலுவலகத்தில் இடம் பெற்றதால் நான் அதற்கு பொறுப்பு சொல்ல வேணடியிருந்தது. இதனால் நீதிமன்றம் சென்றுஎனதுதரப்புநியாயங்களை நான் முன்வைத்துள்ளேன்.

அந்தப் பணம் எனது வங்கி இலக்கத்திற்கு வரவுமில்லை. நானும் கை நீட்டி வாங்கவும் இல்லை. அரசியல் காழ்புணர்ச்சி கொண்டவர்கள் இதனை வைத்து பல கட்டுக் கதைகளை கட்டுகிறார்கள்.

நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது நான் காணி மாபியா வேலை செய்யவில்லை. மாறாக அரச காணிகளை மக்களுக்கு வழங்கியுள்ளேன்.

அதுவும்அடிமட்டமக்களுக்கே அதனை வழங்கியுள்ளேன். காணி மாபியாக்களுக்கு எதிராக நானும் வழக்குதாக்கல் செய்யவுள்ளேன். அரச காணிகளை பிடித்து கள்ளமாக உறுதிகளை எழுதி வைத்துள்ளார்கள்.

அதனைமீட்டுநான்மக்களுக்கு வழங்கினேன். அப்படியான பலர் குழுவாக எனக்கு எதிராக சதி செய்து வருகிறார்கள். நான் சொத்து சேர்ந்துள்ளதாகவும் பல கதைகளை சொல்கிறார்கள். அவை அனைத்தும் பொய்.




முகநூலில் வீரம் பேசுபர்களுக்கு எதிராகவும் நிகழ்நிலை சட்டத்தை மையமாக கொண்டு வழக்கு தாக்கல் செய்யவுள்ளேன்.

இளைஞர்கள், அரச உத்தியோகத்தர்கள், மக்கள் என இணைந்து நாம் வன்னியில் புதிய சக்தியாக எழுச்சி பெறவுள்ள நிலையில், அதனை முடக்குவதற்காக இந்த வேலைகள் இடம்பெறுகின்றன.

எனது அலுவலகத்தில் இருந்த ஒருவர் செய்த மோசடிக்காக, அந்த அலுவலகத்திற்கு பொறுப்பானவர் நான் என்ற அடிப்படையில் தான் நீதிமன்றம் போக வேண்டியுள்ளது.

நான் அவ்வாறு செய்திருந்தால் அல்லது சொத்து குவித்திருந்தால்நிரூபிக்க வேண்டும். நிரூபித்தால் நான் அரசியலில் இருந்து ஒதுங்குவேன்.

எனக்கு விழுந்தது 3,000 வாக்கு. ஆனால் எனது பெயரைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கானோர் மோசடி செய்துள்ளனர்.

தற்போது ஒரு வழக்கு வந்துள்ளது. இனி எத்தனை வருகிறதோ தெரியாது. அதனை நீதிமன்றம் ஊடாக அணுக தயாராகவே உள்ளேன். - என்றார்.

(100)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.12.2024இல் வெளியிடப்பெற்றது